# பழந்தமிழரின் உளவியல் சிந்தனை

**றோ.பெ. றொஷான்**
முதுதத்துவமாணி மாணவன், உயர் பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thamiltheepan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்:

‘உளவியல்’ என்பது இன்று காணப்படும் பல்வேறு துறைகளுக்குள்ளும் அகலக்கால் பதித்துள்ளது. உளவியல் சாராத துறைகள் இல்லை என்று கூறும் அளவிற்கு உளவியலின் தேவை நன்கு உணரப்பட்டிருக்கின்றது. கல்வி உளவியல், மருத்துவ உளவியல், வணிக உளவியல், அரசியலுக்கான உளவியல் என அதன் பன்முகத்தன்மையை அவதானிக்க முடிகின்றது. உளவியல் என்பதன் ஆங்கிலப்பதம் ‘psychology’ ஆகும். மனிதனின் ஆழ்மனத்தோடும், அதன் இயங்கு நிலையோடும் தொடர்புடைய ஒன்றாக உளவியல் காணப்படுகின்றது. உளவியலும் இலக்கியமும் என இன்று பல்வேறு ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றாலும் அவை பிராய்ட், யுங், லக்கான் போன்ற உளவியலாளர்கள் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைத்துள்ள கருத்தியல்களுக்கும், வரன்முறைகளுக்கும் ஏற்ப இன்னமும் முழுமை பெறவில்லை என்றே கூறலாம். அந்தவகையில் சங்க இலக்கியங்களை உளவியல்சார் கருத்துக்களின் அடிப்படையிலே ஆராய வேண்டியது காலத்தின் தேவை எனலாம். பழந்தமிழரிடத்தே நிலவிய உளவியல் பற்றிய சிந்தனைகளை ஆராய்ந்து அறிவதே இந்த ஆய்வின் பிரதானமான நோக்கமாக அமைந்துள்ளது. மேலும், இந்த ஆய்வானது பழந்தமிழரின் வாழ்வைப் பிரதிபலித்துக்காட்டும் சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையை ஆய்வு மூலமாகக் கொண்டுள்ளது. இதன் இரண்டாம் நிலைத் தரவுகளாக நற்றிணையோடு தொடர்புடைய கட்டுரைகளும், ஆய்வுநூல்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த

ஆய்வானது விபரண ஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக நற்றிணைப் பாடல்களில் மறைந்து கிடக்கும் உளவியல்சார் வெளிப்பாட்டை வெளிக்கொணர்வதற்கு பகுப்பாய்வு முறையியல் பயன்பட்டுள்ளது. இத்துடன் நற்றிணைச் செய்யுளிட்களில் உள்ள உளவியல் சிந்தனையை விபரிப்பதற்கு விபரண ஆய்வு முறையியலும் பயன்பட்டுள்ளது. இவ்வாறான ஆய்வினை மேற்கொள்வதன் மூலம் நற்றிணைப் பாடல்களில் மறைந்து கிடக்கும் உளவியல்சார் சிந்தனைகள் வெளிக்கொணரப்படுவதோடு இத்தகைய ஆய்வுகள் பழந்தமிழரிடையே காணப்பட்ட 'மனவெழுச்சி' குறித்த எண்ணப்பாங்கினையும், மனநிலையினையும் பட்டியற்படுத்த உதவும். இத்தகைய ஆய்வுகள் ஊடாகவே உலகப்பொதுமையாகக் கருதப்படும் 'ஆழ்மன உணர்வோட்டம்' என்பது சங்க இலக்கியங்களுக்கும் பொருந்திவரும் உண்மை வெளிக்கொணரப்படும் எனலாம். அத்தோடு சங்க இலக்கியங்களிலே பொதிந்து கிடக்கும் இன்னோரன்ன அறிவியல்சார் சிந்தனைகளையும் வெளிக்கொணர முடியும்.

***பிரதான சொற்பதங்கள்:*** *இலக்கியம், உளவியல், நற்றிணை*

## 1.0 ஆய்வறிமுகம்.

சங்கக் கவிதைகளை உளவியல் நோக்கில் பார்க்கும் அணுகுமுறை ஏற்கனவே தமிழில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் கூர்மையாக்கப்படவில்லை. உளவியலாளர்களான பிராய்ட்டு, யுங், லக்கான் போன்ற முன்னோடிகளால் கலை இலக்கியம் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள பல கோட்பாடுகளும், கருத்தியல்களும் இன்னமும் தமிழுக்கு முழுமையாக வந்து சேரவில்லை. எனவே இன்னும் இந்தப் பார்வையில் தமிழாய்வு பின்தங்கியே நிற்கின்றது.

'உளவியல்' (Psychology) என்பது இன்று ஒரு பெரம் அறிவத் துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறையானது பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் பிரசித்தம் பெற்றது. எனினும் உளவியல்சார் சிந்தனைகள் சங்கத்தமிழரிடையே நிலைபெற்று இருந்துள்ளமையைப் பழந்தமிழ்ச் செய்யுட்களைப் பயில்வதன் மூலம் அறியலாம்.

இந்த ஆய்வின் மூலங்களில் முதல்நிலைத் தரவுகளாக நற்றிணை காணப்படுவதுடன், இவ் ஆய்வானது உணர்வு, சமூக மதிப்பீடுகள், மற்றும் அறிவு நிலை வெளிப்பாட்டில் எத்தகைய உளவியல் சிந்தனை பழந்தமிழரிடத்தே இருந்துள்ளது என்பதனை ஆராய்கின்றது.

## 1.1. உளவியல்

உளவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். இதனால் திட்டவட்டமான வரைவிலக்கணம் ஒன்றைக் கூறிவிட முடியாது. எனினும் உளவியலாளர்களான பிராய்ட், யுங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை உளவியலுக்கான வரையறைகளாகக் கொள்ளலாம். அகராதிகளின் துணைக்கொண்டு ஆராயும் போது ''மனிதமனம் செயல்படுவதைக் குறித்தும், மனத்தின் வெளிப்பாடுகளான நடத்தை, குணம் குறித்தும் ஆராயும் (அறிவியல்) துறை; Psychology."[1] எனவும் "The Science of the Mind – மனதத்துவ சாஸ்திரம்"[2] எனவும் பொருள் கூறப்படுகின்றது.

அந்தவகையில் 'சிக்மண்ட் பிராய்ட்' (Sigmund Freud) மனத்தின் இயல்பு, பாகுபாடு, செயற்பாடு என்னும் நிலைகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு அறிவியல் அந்தஸ்து அளித்தார். இவரே இலக்கியப் படைப்பக்களை ஆராயப்பயன்படும் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) பற்றி முதன் முதலில் எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கியுள்ளார்.

பிராய்டும், யுங்கும் மனித மனத்தின் செயற்பாடுகளுக்கு அடிமனம் எவ்வாறு காரணமாகிறது என்பதையும், கலை இலக்கியப் படைப்புக்களில் அடிமனத்தின் பங்கு என்ன என்பதையும் விளக்கியுள்ளனர். இதன் அடிப்படையில் இலக்கியப் படைப்புக்களில் இடம்பெறும் அடிக்கருத்து, பாத்திரப்படைப்பு, படைப்புக்களில் கையாளப்பெறும் குறியீடுகள் போன்றவற்றை ஆராயும் உளவியல் சிந்தனைகளுக்கு வித்திட்டவர்கள் மேற்கூறப்பட்டவர்களே ஆவர்.

முன்னைய இருவராலும் தெளிவு படுத்தப்பெற்ற அடிமனம், அறிமனம் என்னும் பாகுபாட்டில் லக்கான் அதிக ஆர்வங்கொள்ளவில்லை. மாறாக, அடிமனம் எவ்வாறு தொழிற்படுகின்றது, அடிமனச் செயற்பாட்டிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதைக் குறித்தே ஆராய்ந்தார். இவ்வாறாக இலக்கியத்தில் உளவியலின் தாக்கம் உள்ளமையைக் காணலாம்.

### 1.2. நற்றிணை

நல் + திணை என்ற இரு சொற்களின் கூட்டே நற்றிணை ஆகும். 'நல்ல ஒழுகலாறுகளைக் கூறுவது' என்பதே இதன் பொருள். திணை என்ற சொல்லுக்கு "இலக்கியத்தில் நடந்துகொள்ள வேண்டியமுறை; ஒழுக்கம்; Conduct (in domestic or public context as found in literary conventions)"[3] என்றும் "இடம், நிலம், ஒழுக்கம், பகுப்பு"[4] எனவும் அகராதிகள் பொருள் கூறுகின்றன. சங்ககால அகத்திணை இலக்கியங்களுள் நற்றிணையும் ஒன்றாகும். நற்றிணையில் 7 – 13 அடிவரையுள்ள பாடல்களைக் காணலாம் நற்றிணைப் பாடல்களைத் தொகுக்கச் செய்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி. தொகுத்தவர் பற்றி அறியமுடியவில்லை.

### 1.2. உணர்வுநிலை வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

சங்க இலக்கியங்கள் உயிரோட்டம் வாய்ந்தவை. இவற்றில் உணர்வு என்பதே அத்தகைய செய்யுட்களின் உயிராக நின்றிருப்பதனைக் காணலாம். உணர்வு என்பது மொழிகளைத் தாண்டி அனைத்து உயிர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானது. மொழிகளைக் கடந்து மனிதனை ஒன்றிணைக்கும் ஆற்றல் உணர்வுநிலைக்கு மட்டுமே உண்டு.

தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலிலே மனிதருக்குள் தோன்றும் அடிப்படை உணர்வுகள் குறித்து உளவியல் ரீதியாகச் சிந்தித்துள்ளமையை அவரது சூத்திரங்களைப் பயில்வதன் மூலம் அறியலாம்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம் மெய்ப்பாடு என்ப."[5]

என்ற சூத்திரத்திலே சிரிப்பு, அழுகை, இளிவரல், மருட்கை, பயம், பெருமிதம், வெகுளி, உவகை என்று கூறப்படுவன எட்டும் மெய்ப்பாடு என வரையறை செய்துள்ளார். அந்தவகையில் உணர்வுக்கும் - தொழிற்பாட்டிற்கும் இடையே காரண காரியத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார்.

#### 1.2.1. பிரிவச்சம்

அச்ச உணர்வானது எழும் சூழலைத் தொல்காப்பியர்

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே."[6]

என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவில் நான்கு வகையான அச்ச உணர்வுகள் வெளிப்படுகின்றன என்று கூறுகின்றார். இத்தகைய அச்ச உணர்வானது பாலைப் பாடல்களில் தலைவி கூற்றில் வெளிப்பட்டுள்ள முறையினைக் காணலாம்.

நற்றிணையின் செய்யுள் ஒன்றிலே பாலை நிலத்தின் தன்மையினை நினைத்துத் தோழியிடம் தலைவி புலம்பும் பொழுதும், தன் நெஞ்சுக்கு உரைக்கும் போதும் உணர்வு தோன்றப் புலம்பும் தன்மையினைக் காணமுடிகின்றது. அவ் அச்சவுணர்வானது ஒரு பொருளை அடையமுடியாத நேரத்திலும் தனக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற ஏக்கத்தின் காரணமாகவும் தோன்றுகின்றது.

‘‘ஏர்தரல் உற்ற இயங்கு அருங்கவலைப்
பிரிந்தோர் வந்தும் புணரப் புணந்தோன்
யாதனின் தவிர்க்குவம் காதலர் செலவே.’’[7]

என்ற நற்றிணைப் பாடலில் தலைவனுடைய பிரிவினால் ஏற்படும் துயரைத் தாங்கும் ஆற்றல் தன்னிடம் இல்லை எனவும், அப்பிரிவுத்துயரைத் தாங்காமல் தான் இறந்துபடுவேன் என்றும் தலைவி அஞ்சும் உளவியல் சிந்தனை தெளிவாகின்றது.

சங்கத்தாய் ஒருத்தி தனது மகள் கொடிய பாலைவனத்திலே தலைவனைத் தேடிச் சென்றுள்ள போதும், தலைவன் அவளோடு செல்லாமை கண்டு இரங்கும் மனவெழுச்சி நிலையினை பிறிதொரு நற்றிணைப் பாடலிலே காணலாம்.

‘‘அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்
வையெயிற் றையள் மடந்தை …
மால்வரைமிளிர்க்கும் உருமினுங் கொடிதே’’[8]

என்ற நற்றிணைப் பாடலில் மகளின் பிரிவனால் ஏற்பட்ட துயரைவிட தலைவன் மகளோடு உடன்போகா நின்றமையே அவளுக்கு அழுகை ஏற்படக் காரணமாக அமைந்தது எனலாம். அந்தவகையில் தமிழ் புலவர்கள் உளவியல் சார்ந்து சிந்தித்துள்ளமை புலனாகின்றது.

**2.2 ஊடல்**

சங்ககால மருதத்திணைப் பாடல்களில் ‘ஊடல்’ என்னும் அகவொழுக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. ‘ஊடல்’ என்பது தலைவிக்குத் தலைவன் மேல் எழும் ஒரு பொய்க்கோபம் என்றே கூறலாம். இது தலைவிக்குத் தலைவன் மட்டில் மட்டுமே தோன்றும். இருப்பினும் இந்த ஊடலை விதைப்பதில், வளர்ப்பதில் பல்வேறு புறக்காரணிகளும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன.

தலைவன் பரத்தையை விட்டு நீங்கித் தலைவியிடம் செல்கின்றான். பரத்தையோ தன்னோடு தலைவன் இருந்த செய்தியையும், தலைவனின் செயல்களையும் தலைவியின் தோழியின் காதில் கேட்கும்படி தனது தோழியான விறலியிடம் கூறி தலைவிக்கு ‘ஊடலை’ தூண்டிவிடுகிறாள்.

‘‘உள்ளுதொறும் நகுவன் தோழி …
நன்னர் ஆனள் நடுங்கஞர் நிலையே’’[9]

என்னும் மருதத்திணைப் பாடலில் ‘ஊடல்’ என்னும் மனவெழுச்சியை பரத்தை தலைவியிடத்தே தோற்றுவிக்கும் உளவியற் செயற்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பிறிதொரு பாடலிலே தலைவன் பரத்தையிடம் சென்றதை அறிந்த தலைவி தலைவனோடு ஊடலுற்று அவனை வாயில் மறித்துவிடுகிறாள். இந்நிலையில் இதையறிந்த தோழி, தலைவியின் கோபம் தீரும் வகையிலே தலைவனை இகழ்ந்து பேசுவதுபோல் பேசி தலைவியின் கோபம் தணிக்கும் உள ஆற்றுகைச் சிந்தனைக்கு பின்வரும் பாடல் சான்றாக அமைகின்றது.

‘‘அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்…
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வஞ் செல்வம் என்பதுவே’’[10]

என்ற நற்றிணைச் செய்யுளிலே தலைவியின் கோபத்தை ஆற்றுவதற்கு தலைவனின் மனநிலையைப் பாதிக்காத வகையில் உளவியல் உத்தியைக் கையாண்டுள்ளமை புலப்படுகின்றது. ‘உண்மையான செல்வம் என்பது உன்னை

நம்பி உள்ளோருக்கு எக்குறையும் இல்லாதவாறு காத்தலே அன்றி வேறில்லை. நீ தலைவியை துன்பம் அடையச் செய்வதானது உன்னிடம் செல்வநலன் இல்லை என்பதனையே காட்டுகன்றது' எனக் கூறுவதனூடாகப் புலவனின் உளவியல் சிந்தனையும் வெளிப்பட்டு நிற்கிறது.

**2.3. புணர்தல்**

குறிஞ்சி நிலத்துக்குரிய அகவொழுக்கமாகப் புணர்தலைக் குறிப்பிடுவர். புணர்தல் என்பது உயிரினங்களின் அடிப்படை உணர்ச்சி என்றே கூறலாம். அந்தவகையில் புணர்தல், புணர்தல் நிமித்தம் தொடர்பான உளவியல் சிந்தனைகள் பண்டைத் தமிழரிடத்தே பயன்றுவந்துள்ளமையைக் காணலாம்.

ஒரு நெய்தல் நிலத்துத் தலைவி மருத நிலத்துத் தலைவன் மீது காதல் கொண்டுள்ளாள். தலைவனோ வரவு நீட்டிக்கிறான். இந்நிலையில் 'நம்மைப் பற்றிய அலர் ஊர் முழுதும் பரவிவிட்டது. இதனை அன்னை அறிந்தால் நாம் களவில் நீடிக்க முடியாது எனக் கூறினால். அவன் தனது ஊருக்கு தன்னைக் கூட்டிச் செல்வானோ?' எனத் தோழியிடம் வினவுவதாக அமைந்துள்ளது.

''கானல்அம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்…
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்பிற்றம் உறைவின் ஊர்க்கே.''[11]

என்னும் பாடலிலே, தலைவி புணர்தலின் நிமித்தம் ஆசை கொள்ளும் மனவெழுச்சி நிலை வெளிப்படுத்தப்படுகின்றது.

'காமம் மிகுந்த களிபடர் கிளவி' என்ற வகையைச் சார்ந்ததாக அமைந்துள்ள பறிதொரு பாடலிலே; தலைவன் மீது தலைவிக்கு உண்டான வேட்கை மிகுதியால் ஆற்றாளாகி, அ∴றிணை உயிரினமான நாரையிடம் தனது மனநிலையைக் காண்பித்து தூது போகக் கேட்கிறாள். துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு ஒன்றில் பிறரிடம் கூறுதல், அ∴றிணைப் பொருட்களிடம் தெரிவித்தல் போன்றவற்றையே ஆற்றுப்படுத்துனர்களும் கையாளுகின்றனர். இவ்வாறான சிந்தனையின் வெளிப்பாடாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

''வளைநீர் மேய்ந்து கிளைமுதற் செலீஇ…
கண்டல் வேலிநும் துறைகிழ வோற்கே.''[12]

மேற்கூறப்பட்ட செய்யுள் உளவியல் சிந்தனைக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

**1.2.4. இரங்கல்**

அகப்பொருள் மரபின்படி இரங்கலும், இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணையின் பாற்படும். தொழிலின் நிமித்தம் தம்மைப் பரிந்து போகும் தலைவனின் பிரிவை ஆற்றாது தலைவி இரங்கல் நிலையிலே தவிப்பாள். இந்நிலையை உளவியல் சிந்தனையின் அடிப்படையில் பின்வருமாறு நோக்கலாம்.

தலைவி ஒருத்தி தலைவனைப் பிரிந்ததனால் மெலிவடைந்து காணப்படுகின்றாள். அவள் தனக்கு ஆறுதல் கூறும் தோழியைப் பார்த்து 'இல்லறத்திலே சேர்ந்து இன்பம் அனுபவிப்பதனைக் காட்டிலும் சிறந்த செல்வம் உண்டெனக் கருதி பொருள் தேடிச் சென்றுவிட்டார். சென்ற போதும் என்னை அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அவர் நினைந்திருந்தால் எனக்கு விக்கலோ, தும்மலோ ஏற்ப்டிருக்குமே' எனக் கூறுகிறாள்

''வடுவின்று நிறைந்த மான்தேர்த் தென்கண்..
எவ்வநோய் பிறிது உயவுத்துணை''[13]

மேற்கூறப்பட்ட செய்யுளிலே, தான் கொண்ட எண்ணம் சரி அல்லது பிழையென வாதிடும் உளவியல் சிந்தனை புலனாகின்றது.

தலைவனின் பிரிவால் தனிமையில் வாடும் தலைவி 'இவ்வுலகம் என்னோடு போர் செய்யுமோ? இல்லை இந்த உலகோடு எனது நெஞ்சம் போர் செய்யுமோ?' என உள்ளம் பேதலிக்கும் நிலையினை வெளிப்படுத்துகின்றது.

"... என்னொடு பொருங்கொல் இவ்வுலகம்
உலகமொடு பொருங்கொல் என்அவலமுறு நெஞ்சு"[14]

என்ற பாடலிலே மேலே விபரித்துக்காட்டிய உளவியல் சிந்தனை புலனாகின்றது.

### 1.2.5. இருத்தல்

முல்லைத் திணைக்குரிய அகத்திணை ஒழுக்கம் இருத்தல். இது காத்திருத்தல், காவலிருத்தல் என்ற இரு வகையிலே நோக்கத்தக்கது. உளவியல் சிந்தனையின் அடிப்படையிலே நோக்கும் போது, நற்றிணையின் பல்வேறு செய்யுட்களிலே இதனைக் கண்டு தெளியலாம்.

தலைவன் பாசறை முடித்து தன் தேர்ப்பாகனிடம் 'விரைந்து போகும் குதிரைகளைத் தெரிந்து தேரில் மாட்டு. எனக்காக தலைவி கண்ணகளில் நீரோடு காத்திருப்பாள். இன்று அவளோடு இணைந்து விருந்துண்ண வேண்டும்' என மொழிகிறான்.

"...அழுதனள் உறையும் அம்மா அரிவை
விருந்தயர் வருப்பொடு விருந்தினர் அசைஇ
முறுவல் இன்னகை காண்கம்."[15]

மேற்கூறப்பட்ட பாடலில் ஒரு பிரச்சினையை மற்றவர் நிலையில் நின்று பார்க்கும் பண்பு 'மற்றவர் நிலைக்குள்ளாதல்' (Empathy) என்னும் உளவியல் சிந்தனை வெளிப்படுகின்றது. இது புலவனின் குடும்ப உளவியல் சிந்தனை என்றே கூறலாம்.

## 1.3. சமூக மதிப்பீடுகளின் வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

உளவியல் என்பது ஒருவன் தன்னைத்தானே அளவிடும் கருவி. ஒருவன் தன்னைப் பற்றிச் சிந்தித்தன் விளைவாகவே உளவியல் பிறந்தது. சமூகம் தனிமனிதர்களாலான ஓரமைப்பு. அந்தவகையில் நன்மை – தீமை, நல்லது – கெட்டது என்ற இருதுருவ நிலையில் உளவியல் சிந்தனை அமைந்தள்ளதனைக் காணலாம்.

### 1.3.1. நட்பு

உளவியல் சிந்தனைகளின் சமூக மதிப்பீடுகள், ஒழுக்க நியமங்களில் நட்பு என்பது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஒரு நண்பனைத் தேர்ந்தெடுப்பதிலும், நட்புப் பாராட்டுவதிலும் ஒவ்வொருவருக்கும் இடையில் தனித்துவங்கள் உண்டு. அந்தவகையில் நண்பர்களைத் தெர்ந்தெடுப்பது பற்றியும், நட்புப்பாராட்டும் தன்மை குறித்தும் நற்றிணைச் செய்யுட்கள் இயம்புகின்றன.

"அரிய வாழி தோழி பெரியார்
நாடி நட்பின் அல்லது
நட்டு நடார்தம் ஒட்டியோர் திறத்தே."[16]
"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"[17]

மேற்கூறப்பட்ட பாடல்கள் இரண்டிலும் நட்பாராயும் உளவியல் குறித்தும், ஆய்ந்து நட்புக் கொண்டபின் நண்பன் நஞ்சைக் கொடுத்தாலும் அதை மகிழ்வோடு பருகும் நிலையையும் சமூக மதிப்பீட்டு உளவியல் என்றே கொள்ளலாம்.

### 1.3.2 திருமண பந்தத்தில் நிலைத்து நிற்றல்

இன்று திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டாலும் அவற்றில் அதிகமானவை நீதிமன்றங்களில்தான் முற்றுப்பெறுகின்றன. அந்தவகையிலே திருமணம், குடும்பம் பற்றிய உளவியல் சிந்தனையை பண்டைத் தமிழரிடத்தும் நிலவியிருந்துள்ளமையினைக் காணலாம்.

தலைவன் தலைவியை உண்மையாக அன்பு செய்கிறான். தலைவியும் தலைவனின் பிரிவைத் தாங்க முடியாது துவண்டு போய்விடுகிறாள். இந்நிலையில் தோழி இருவருக்கும் உடன்போக வழிசெய்து வழியனுப்பும் தறுவாயில் குடும்பம் ஒன்றுக்கு வேண்டிய உளவியல்சார் கருத்துக்களை முன்வைக்கிறாள்.

“அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த …
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.”[18]

என்று கூறும் நற்றிணைச் செய்யுளிலே தலைவியின் மார்புகள் தளர்ந்து இளமை போய் முதுமை வந்த நிலையிலும், கருங்கூந்தல் நரைகூடிப் போன போதும் உன்னை நம்பி வந்த அவளைக் கைவிடாதே என அறிவுரை கூறிநிற்பது உளவியலின் வெளிப்பாடே எனலாம்.

### 1.3.3. ஆடவர் ஒழுக்கம்.

ஒரு ஆணைப்பற்றிய பெண்ணின் மனப்பதிவானது எப்படி இருக்கவேண்டும். எப்படி எல்லாம் இருக்கக் கூடாது என்பதனைப் பெண்ணின் நிலையில் நின்று சிந்தித்துப் பார்த்திருக்கும் உளவியல் வெளிப்பாட்டை நற்றிணையிலே அறியமுடிகின்றது.

“நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்
என்றும் என்தோள் பரிபுஅறி யலரே…
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்புஅறி யலரே.”[19]

என்று தோழிக்குத் தலைவனின் சிறப்புக்களைக் கூறுவதிலிருந்து ஒருவரைப் பற்றிய புரிதலுக்கு நல்லெண்ண உளவியல் அவசியமாகின்றமை புலனாகின்றது.

## 1.4. அறிவு நிலை வெளிப்பாட்டில் உளவியல் சிந்தனை

அறிவுசார் உளவியல் சிந்தனைகள் பழந்தமிழரிடையே இருந்துள்ளன. உணர்ச்சி, அறிவு என்னும் இரண்டும் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றன. இந்த இரண்டிற்கும் இடையிலான போராட்டமே வாழ்க்கை.

### 1.4.1 அறிவு

தலைவி மேலுள்ள காதலினால் தலைவன் பொருள் தேடச்சென்று பாதிப்பொருள் ஈட்டிவிட்டான். அவன் மனமோ திரும்பி அவளிடம் செல்ல நினைக்கிறது. அறிவோ அவளுக்காக மீதிப்பொருளையும் ஈட்டச் சொல்கிறது. அவனோ அறிவு மனம் என்னும் பலம்வாய்ந்த இரு யானைகளால் இழுக்கப்படும் பழங்கயிற்றைப் போல துன்புறுகிறான்.

“ …களிறுமாறு பற்றிய
தேய்புரி பழங்கயிறு போல
வீவதுகொல் என் வருந்திய உடம்பே?”[20]

என்ற பாடல் மூலம் அறிவு, மனம் பற்றிய நுண்ணிய அறிவு பழந்தமிழரிடத்தே இருந்துள்ளமை தெளிவாகின்றது.

### 1.4.2 மனப்பக்குவம்

இயற்கையைத் தன் தாயாக சகோதரியாகப் பார்க்கும் மனநிலை உளவியலின்பாற்படும். இதனைச் சூழல் சார்ந்த உளவியல் பண்பாகக் கொள்ளலாம். ஒரு ஏழு வயதுச் சிறுமி கடற்கரையிலே புன்னைக்காயைக் கொண்டு விளையாடுகிறாள். ஒருவாரம் கழித்து அது முளைத்திருந்ததைக் கண்டு தனது தோட்டத்திலே வைத்து வளர்க்கிறாள். அவளும் வளர மரமும் வளர்ந்தது.அவளும் திருமணம் முடித்து ஒரு குழந்தைக்குத் தாயாகி விடுகிறாள். தனது மகளிடம் புன்னையை சகோதரி என்றே கூறுகிறாள். மகளும் பெரியவளாகிக் காதலனோடு புன்னை மரத்தடியில் கூடுகிறாள். இருப்பினும் பேசாது நாணி நிற்கிறாள். இதற்குக் காரணம் புன்னையைத் தனது சகோதரியாக எண்ணியதே.

" விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
அம்ம நாணதும் நும்மொடு நகையே"[21]

என்ற பாடலில் ஓரறிவுள்ள மரத்தைத் தன் குழந்தையாகப் பார்த்த தாயையும், சகோதரியாகப் பேணிய மகளையும் காணலாம். இருவரும் உளவியல் சார்ந்த மனப்பக்குவத்திற்குச் சான்றாக அமைகின்றனர்.

## 1.5. தொகுப்புரை

பழந்தமிழரிடத்தே உளவியல்சார் சிந்தனைகள் ஒரு துறையாக வளர்ச்சி அடைந்திராத போதும் உளவியல் எண்ணக்கருக்களும், சிந்தனை முயற்சிகளும் இடம்பெற்றிருப்பதனை இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

நற்றிணைச் செய்யுட்கள் பலவற்றிலும் உளவியல்சார் சிந்தனைச் சிதறல்களையும், மனப்பதிவுகளின் அடையாளங்களையும் கண்டுகொள்ள முடிகிறது. பழந்தமிழரின் வாழ்கையிலும் உளவியல்சார் சிந்தனைகள் வாழப்பட்டிருக்கின்றமைக்குப் பல அகச்சான்றுகளைக் காட்டமுடியும்.

பழந்தமிழரிடையே வாழப்பட்ட உளவியல் சார்ந்த சிந்தனைகளைத் தேடித் தொகுப்பதன் மூலமாக வழக்கிலிருக்கும் பல்வேறு உளவியல், ஒழுக்கவியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

## அடிக்குறிப்புக்கள்

1. க்ரியாவின் தற்கால அகராதி, ப. 542
2. கோனார் தமிழ்க் கையகராதி, ப. 350
3. க்ரியாவின் தற்கால அகராதி, ப. 156
4. The Little Lifco Dictionary, P. 284
5. தொல்காப்பியம், பொருள். சூத்.3, 393
6. மேலது, பொருள். சூத். 8, ப. 394
7. நற்றிணை, செய். 79, ப.147
8. மேலது , செய். 02, ப.134
9. மேலது , செய். 100, ப.150
10. மேலது , செய். 210, ப.169
11. மேலது , செய். 04, ப.134
12. மேலது , செய். 354, ப.142
13. மேலது , செய். 130, ப.155
14. மேலது செய். 348, ப.191
15. மேலது , செய். 81, ப.147
16. மேலது , செய். 32, ப.139
17. மேலது , செய். 355, ப.192

18 மேலது , செய். 10, ப.135

19. மேலது , செய். 01, ப.135
20. மேலது , செய். 284, ப.181

21 மேலது , செய். 172, ப.162

**துணைநின்ற நூல்கள்**


01. **க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி**, க்ரியா, சென்னை, 2004.
02. கைலாசபதி.க, **பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்**, குமரன் பதிப்பகம், சென்னை, 1999.
03. கைலாசபதி.க, **சமூகவியலும் இலக்கியமும்**, நியூ செஞ்சரி புக்ஹவுஸ், சென்னை, 1988.
04. **கோனார் கையகராதி**, (உரை) ஐயன்பெருமாள் கோனார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1992.
05. **சங்க இலக்கியம்,** (பதிப்பு) சுப்பிரமியம்.ச.வே, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2011.
06. சிதம்பரனார் சாமி, **எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்,** ஸ்டார் பிரசுரம், சென்னை, 1957.
07. சிவத்தம்பி.கா, **இலக்கியமும் கருத்துநிலையும்**, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1982.
08. **திருக்குறள்**, (உரை) நாமக்கல் கவிஞர், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1987.
09. **நற்றிணை மூலமும் உரையும்**, நாராயணசாமி ஐயர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1956.
10. விசாகரூபன்.கி, **சங்க இலக்கியம் : பதிவும் பார்வையும்,** மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம், 2008.
11. **The Little Lifco Dictionary**, The Little Flower Co, Chennai, 1999.